ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2475/06 - 2026 පෙබරවාරි මස 10 වැනි අඟහරුවාදා - 2026.02.10

*2475/06 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 94/ 47 (IX)

**(269 ஆம் அத்தியாயமான ) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

பிரிவு 6(2) (ஆ) மற்றும் பிரிவு 21(2) (ஆ) என்பவற்றின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான ) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2) (ஆ) என்னும் பிரிவாலும் மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், பிமல் நிரோஷன் ரத்நாயக்க ஆகிய நான், இக் கட்டளை மூலம்.-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "ஸ்ரீ போதிருக்காராம விஹாரைப் பிரதேசம்" எனவழைக்கப்படும் காணி இடப்பரப்பு, மேற் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(ஆ) ஒரு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலேயுள்ளவாறு வெளிப்படுத்தப்படும் "ஸ்ரீ போதிருக்காராம விஹாரைப் பிரதேசத்துக்காக" உருவரை பௌதீக வரைபடமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,
மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2026, சனவரி 05.

1A - G 46266— 13 (2026/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### அட்டவணை

### ஸ்ரீ போதிருக்காராம விஹாரையைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பு

வடமேல் மாகாணத்தில், குருநாகல் நிருவாக மாவட்டத்திலுள்ள, மாஹோ பிரதேச செயலகப் பிரிவினுள், இபலோகமவில் உள்ள இபலோகம கிராமத்தில் (கி.அ.பிரிவு 167) அமைந்துள்ளவையும், 2024, நவெம்பர் 27 ஆந் திகதிய கேயூ/எம்எச்/ டபிள்யூ/2024/93 ஆம் இலக்க நில அளவையாளர் தலைமையதிபதியின் சுவடு வரைவில் குறித்துக்காட்டப்பட்டவாறானவையும், காணித்துண்டம் “ஏ” (0.0940 ஹெக்டயர்), காணித்துண்டம் “பி” (0.0227 ஹெக்டயர்), காணித்துண்டம் “சீ” (0.9111 ஹெக்டயர்), காணித்துண்டம் “ஈ” (0.0214 ஹெக்டயர்) , காணித்துண்டம் “எவ்” (0.2021 ஹெக்டயர்) என்பவற்றைக் கொண்டுள்ளவையும், பரப்பளவில் (1.2513 ஹெக்டயார்) கொண்டுள்ளதுமான அக்காணி இடப்பரப்புகள் அடங்கலும் ; அவற்றின் எல்லைகள் பின்வருமாறு:

**காணித்துண்டு ‘ஏ’ - திம்பிரிவலஹேன (0.0940 ஹெக்டயர்)**

வடக்கு : வீதி (பிரதேச சபை) ;

கிழக்கு : காணித்துண்டம் ‘பி’, ஆர்.ஐ. பி. மெனிக்ரால மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்பட்ட போகஹஎஸ்வத்தும அத்துடன் காணித்துண்டம் ‘டி’ (கால்வாய்);

தெற்கு : காணித்துண்டம் ‘சீ’ மற்றும் ஆர்.ஐ. பி. சேனாரத்னவினால் உரிமைகோரப்பட்ட சூரியகஹமுலவத்த ; அத்துடன்

மேற்கு : அரசாங்கத்தினால் உரிமைகோரப்பட்ட திம்பிவெலஹேன.

**காணித்துண்டு ‘பி’ - போகஹவெல மற்றும் போகஹனஹேன (0.0227 ஹெக்டயர்)**

வடக்கு : வீதி (பிரதேச சபை) ;

கிழக்கு : ஆர். ஐ. பி. மெனிக்ரால மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்பட்ட போகஹஎஸ்வத்தும் அத்துடன் காணித்துண்டம் ‘டி’ (கால்வாய்) மற்றும் காணித்துண்டம் ‘ஏ’;

தெற்கு : காணித்துண்டம் ‘டீ’ (கால்வாய்) மற்றும் காணித்துண்டம் ‘ஏ’ (கால்வாய்) ; அத்துடன்

மேற்கு : காணித்துண்டம் ‘ஏ’.

**காணித்துண்டு ‘சீ’ - சியம்பலாகஹவத்த மற்றும் போகஹஹேன (0.9111 ஹெக்டயர்)**

வடக்கு : அரசாங்கத்தினால் உரிமைகோரப்பட்ட திம்பிரிவலஹேன மற்றும் காணித்துண்டம் ‘ஏ’ ;

கிழக்கு : காணித்துண்டம் ‘டீ’ (கால்வாய்) ;

தெற்கு : காணித்துண்டம் ‘டீ’ (கால்வாய்) மற்றும் வீதி ; அத்துடன்

மேற்கு : வீதி, ஆர். ஐ. பி. யசேகர மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்பட்ட சூரியகஹமுலவத்த அத்துடன் ஆர். ஐ. பி. சேனாரத்னவினால் உரிமை கோரப்பட்ட சூரியகஹமுலவத்த.

**காணித்துண்டு ‘ஈ’ - சியம்பலாகஹவத்த மற்றும் போகஹஹேன (0.0214 ஹெக்டயர்)**

வடக்கு : காணித்துண்டம் ‘டி’ கால்வாய் ;

கிழக்கு : காணித்துண்டம் ‘டி’ கால்வாய் ;

தெற்கு : காணித்துண்டம் ‘டி’ கால்வாய் ; அத்துடன்

மேற்கு : கால்வாய் மற்றும் காணித்துண்டம் ‘டி’ (கால்வாய்).

**காணித்துண்டு ‘எவ்’ - போகஹஹேன மற்றும் பின்லியத்த (0.2021 ஹெக்டயர்)**

வடக்கு : காணித்துண்டம் ‘டி’ (கால்வாய்) மற்றும் ;காணித்துண்டம் ‘ஜீ’;

கிழக்கு : ஆர். எம். புஞ்சிபண்டா மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்பட்ட கதுருகஹகும்புர, ஆர். ஐ. பி. கபுருபண்டாரவினால் உரிமை கோரப்பட்ட கதுருகஹகும்புர மற்றும் கால்வாய்;

தெற்கு : கால்வாய் ; அத்துடன்

மேற்கு : காணித்துண்டம் ‘டி’ (கால்வாய்).

EOG 02 - 0074

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.